# இனப் பிரச்னை தீர்வு; அரசு — ராணுவம் குழப்ப நிலையில்!

(கொழும்பு)

விடுதலைப் புலிகள் பற்றிய பேச்சே நாட்டில் பிரபல்யம் அடைந்துள்ளது. சிலர் முன்னாள் ஜனாதிபதி பிரேமதாசாவுடனான பேச்சுப் போல், புலிகளுடன் பேச்சை ஆரம்பிக்க வேண்டுமென விரும்புகிறார்கள். இராணுவத்தில் பெரும் மட்டத்திலுள்ளவர்களே புலிகளை நிபந்தனையின்றி பேச அழைத்த சம்பவமும் உண்டு. அரசின் ஆதரவின்றி அப்படியான அழைப்பு இருந்திருக்க முடியாது. ஆனால் அரசு அப்படி ஏதும் பேச்சு இல்லையென கூறி நிராகரித்துள்ளது.

(6ம் பக்கம் பார்க்க)

விலை ரூபா 5-00

ஈழநாடு

THE EELANADU
NATIONAL TAMIL DAILY

மலர் 36 திருவள்ளுவர் ஆண்டு 2025 மாசி 5 இதழ் 7
யாழ்ப்பாணம் வியாழக்கிழமை 17-2-1994

## காமினியை எதிர்க்கும் 38 எம்.பி.க்கள்

(கொழும்பு)

காமினி திசநாயக்காவுக்கு அமைச்சர் பதவி வழங்கினால், ஐக்கிய தேசியக் கட்சியின் 38 நாடாளுமன்ற உறுப்பினர்கள் ராஜினாமாச் செய்வார்கள் என்று தெரிவிக்கப்படுகிறது.

இந்த 38 நாடாளுமன்ற உறுப்பினர்களும் கையெழுத்திட்டு, தமது ஆட்சேபக் கடிதத்தை ஜனாதிபதி டி. பி. விஜேதுங்கவுக்கும், பிரதம மந்திரி ரணில் விக்கிரமசிங்கவுக்கும் அனுப்பி வைத்துள்ளனர்.

இந்த நாடாளுமன்ற உறுப்பினர்களின் பின்னணியில் பல அமைச்சர்களும் காமினிக்கு எதிராக இயங்குகின்றார்கள் என்று 'லக்திவ' பத்திரிகை தெரிவித்திருக்கிறது.

(6-ம் பக்கம் பார்க்க)

● யுத்தத்தால் பலனில்லை

# முன்னாள் படைத் தளபதிகள்

# அரசியல் தீர்வுக்கு வற்புறுத்து!

## வெல்லமுடியாத யுத்தமாம்

(கொழும்பு)

இந்த யுத்தத்தை நிறுத்தி, அரசியல் தீர்வு காணவேண்டுமென்று முன்னாள் படைத் தளபதிகள் கருத்துத் தெரிவித்துள்ளனர். முன்னாள் இராணுவத் தளபதி டெனிஸ் பெரேரா, விமானப் படைத் தளபதி ஹரி குணதிலக, கமாண்டோ படைத் தளபதி சுனில் த சில்வா ஆகியோர் இனப் பிரச்னைக்கு யுத்தம் தீர்வல்ல, அரசியல் தீர்வுதான் ஒரே வழி என்று கூறியுள்ளனர்.

தேவையற்ற இந்த யுத்தம் தினால் படையினரே அநியாயமாக உயிரிழப்பதாக இலங்கை கருதத் தொடங்கிவிட்டனர். அரசியல்வாதிகளினதும் ஆட்சியாளர்களினதும் பொறுப்பற்ற பேச்சுக்கள் அப்பாவிகளின் உயிரைப் பறிப்பதாகவும் இத்

(6ம் பக்கம் பார்க்க)

## முரண்பட்ட நிலையில் வெளியேறும் விமானப் படைத் தளபதி!

(கொழும்பு)

விமானப் படைத் தளபதி ஏர் வைஸ் மார்ஷல் ரெறன்ஸ் குணவர்த்தனவும் அரசுடனும் பாதுகாப்பு அமைச்சுடனும் பல முரண்பாடுகளை சந்தித்தே தமது பதவியிலிருந்து இன்று ஓய்வு பெறுகிறார்.

தமக்கு எதிராக பாதுகாப்பு அமைச்சிலும், அரசு உயர் வட்டாரங்களிலும் ஏற்கனவே கூட்டுப்படைத் தலைமையகம் இருந்தபோதும் பல குழுத் தறுப்புகளும் சகிக்கமுடியாத பல சம்பவங்களும் இடம் பெற்றதாகவும் இவர் மனம் நொந்தநிலையில் கூறியுள்ளார்.

முன்னர் பிரேமதாசவின் ஆட்சியின்போது ஜெனரல் ஹமில்டனுடன் பலத்த சச்சரவுப்பட்டு

(6-ம் பக்கம் பார்க்க)

## இரத்மலானை இந்துக் கல்லூரியில் மீண்டும் இராணுவ முகாம்?

(கொழும்பு)

இரத்மலானை இந்துக் கல்லூரியை இராணுவ முகாமாக மாற்றுவதற்காக இராணுவத் தலைமையகம் தற்போது முயற்சிகளை மேற்கொண்டு வருகின்றது.

மேல்மாகாணத்தில் மிகப் பெரிய தமிழ் கல்லூரியாக விளங்கிவரும் இரத்மலானை இந்துக் கல்லூரியை, கடந்த வாரம் இராணுவ உயர்பீட அதிகாரிகள் சென்று பார்வையிட்டுள்ளார்கள்.

1992ம் ஆண்டுக்கு முன் பத்து வருடங்களாக மேற்படி கல்லூரியை இராணுவத்தினர் முகாமாகப் பயன்படுத்தி வந்துள்ளார்கள்; மீண்டும் இக் கல்லூரியை இராணுவம்

(6-ம் பக்கம் பார்க்க)

## ராஜீவ் கொலை சந்திரசேகர், வாஜ்பாய் சாட்சியமளிக்க அழைப்பு

(புதுடில்லி)

ராஜீவ் காந்தி கொலை வழக்கு சம்பந்தமாக நீதிமன்றத்தில் சாட்சியமளிக்க வருமாறு முன்னாள் பிரதமர் சந்திரசேகருக்கும், பாரதிய ஜனதா கட்சித் தலைவர் திரு. வாஜ்பாய்க்கும் நீதிமன்றம் உத்தரவு பிறப்பித்துள்ளது.

ராஜீவ் காந்தி கொலை செய்யப்படும்போது திரு. சந்திரசேகர் இந்தியப் பிரதமராக பதவி வகித்தவர். திரு வாஜ்பாய் எதிர்க்கட்சித் தலைவராக இருந்தவர். திரு. ராஜீவ் காந்தி கொலை செய்யப்படும் போது இவர்கள் முக்கிய பதவியில் இருந்தவர்கள் அவ்வேளை நேரில் பார்த்துள்ள நிலையில், இவர்களின் சாட்சியம் முக்கியம் என்று நீதிபதி ஜெயின் கூறியுள்ளார்.

இவர்களுடன் உள் துறை

(6-ம் பக்கம் பார்க்க)

## எதிர்க் கட்சியினருடன் ஆரியரத்ன சந்திப்பு

(கொழும்பு)

சர்வோதயத் தலைவர் கலாநிதி ஆரியரத்ன, எதிர்க் கட்சித் தலைவி திருமதி சிறிமாவோ பண்டாரநாயக்க உட்படப் பல எதிர்க் கட்சித் தலைவர்களைச் சந்தித்துப் பேசியுள்ளார்.

யாழ்ப்பாணம் சென்று திரும்பியது குறித்தும், விடுதலைப் புலிகளின் சமாதான அழைப்

(6ம் பக்கம் பார்க்க)

## அமைச்சர் புலேந்திரனை கொல்ல முயற்சி?

(வவுனியா)

வன்னி இராஜாங்க அமைச்சர் திருமதி இராஜமனோகரி புலேந்திரனை கொலை செய்ய திட்டம் தீட்டப்பட்டிருந்ததாக பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

இதுதொடர்பாக வவுனியாவில் மூன்று முஸ்லிம் நபர்கள் கைது செய்யப்பட்டுள்ளதாகவும் பொலிஸார் தெரிவித்தனர்.

உள்ளூராட்சி தேர்தல் பிர

(6-ம்பக்கம் பார்க்க)

## ஈ.பி.டி.பி. — பொலிஸார் காவலூரில் மோதல் நிலை

(யாழ்ப்பாணம்)

ஊர்காவற்றுறையில், பொலிஸாருக்கும்—ஈ. பி. டி. பி. குழுவினருக்குமிடையில் கடந்தவாரம் ஏற்பட இருந்த பலத்த மோதல் ஒன்று இறுதி நேரத்தில் தவிர்க்கப்பட்டது.

மேற்படி பகுதியில், ஈ. பி. டி. பி. குழுவினர் லொறியொன்றில் ஆயுதபலராகச் சென்ற போது, ஊர்காவற்துறை உதவி பொலிஸ் அதிகாரி அந்த லொறியை வழிமறித்து விசாரணை செய்தபோது இரு பகுதியினருக்குமிடையில் வாக்குவாதம் ஏற்பட்டு, இறுதியில் துப்பாக்கி சகிதம் மோதலுக்கு தயாரானார்கள். இறுதியில் இருபகுதியினரும் அவ்விடத்தைவிட்டு விலகிச் சென்றுவிட்டார்கள்.

(6-ம் பக்கம் பார்க்க)

## இலவச சீருடை யூனில் விநியோகம்

(கொழும்பு)

இந்த ஆண்டுக்கான பாடசாலைச் சீருடைகள், யூன் மாதம் விநியோகிக்கப்படும். இதற்காக இம்முறை 45 கோடி ரூபா செலவிடப்படுகிறது.

42 லட்சம் பாடசாலை மாணவ, மாணவிகளுக்கும், 40,000 பிக்கு மாணவர்களும் இதனைப் பயன்பெற உள்ளனர். இதற்காகச் சீனாவில் இருந்து 95 லட்சம் மீற்றர் துணிகள் இறக்குமதி செய்யப்படவுள்ளன.

யூன் மாதம் இறுதி வாரத்திற்குள் இத்துணிகள் யாவும் சகல பாடசாலைகளுக்கும் விநியோகித்து முடிக்கப்படும் என்றும் கல்விச்சேவைகள் அமைச்சர் திருமதி சுனேத்திரா ரணசிங்க தெரிவித்துள்ளார். மாணவர்களுக்கு $1\frac{1}{4}$ முதல் $1\frac{3}{4}$ யார் வரை சேர்ட் துணியும், $\frac{3}{4}$ யார் தொடக்கம் 2 யார் வரை காற்சட்டைத் துணியும்,

(6-ம் பக்கம் பார்க்க)

## வரி விளம்பரம்

### மணப் பெண் தேவை

பிரான்சில் நிரந்தர வேலை பார்க்கும் 38 வயது கத்தோலிக்க மணமகனுக்குத் தேவை. இலங்கை வந்து திருமணம் செய்வார். மங்கள ஏஜென்சி, கொய்யாத்தோட்டம். (இ-803)

### மிருதங்கம்

N. C. O. M. S. பரீட்சை எடுக்கும் மாணவர்களின் மிருதங்க வேலைகள் திருத்தி செய்து கொடுக்கப்படும். கோவிந்தபிள்ளை விஜயகுமார் 192/1 நாவலர் றோட், பெருமாள் கோவிலடி, யாழ்ப்பாணம். (இ-789)

### வாருங்கள் திருத்திப்பாருங்கள்

சகல மணிக்கூடுகள், றேடியோக்கள் உத்தரவாதத்துடன் திருத்திக்கொள்ள எம்மை நாடுங்கள். உதிரிப் பாகங்களுக்கான நல்ல நிலையில் உள்ள மணிக்கூடுகள் வாங்கப்படும். டிக்கா வாச் அன் றேடியோ வேக்ஸ், 284, ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம். (மானிப்பாய் கூல்பார் அருகில்) இல: கண்டி வீதி, சாவகச்சேரி. (ஏ-3795)

## இன்றைய உதைபந்தாட்டம்

(யாழ்ப்பாணம்)

யாழ். உதைபந்தாட்ட லீக்கின் 50வது ஆண்டு நிறைவையொட்டி விளையாட்டுக் கழகங்களிடையே நடாத்தப்பட்ட உதைபந்தாட்டப் போட்டியின் இறுதி கட்ட ஆட்டத்தில், இன்று 17ம் திகதி வியாழக்கிழமை பாஷையூர் சென் அன்ரனிஸ் கழகமும் குருநகர் பாடுமீன் கழகமும் மோதுகின்றன.

இப் போட்டி இன்று மாலை 3-30 மணிக்கு பாஷையூர் சென். அன்ரனிஸ் விளையாட்டுக்கழக மைதானத்தில் நடைபெறும். வி-இ

## காங்கேசன் ம. வி. மாணவர்க்கு

(யாழ்ப்பாணம்)

காங்கேசன்துறை மகா வித்தியாலயம் இடம்பெயர்ந்து 1990ம் ஆண்டு தொடக்கம் இணுவில் இந்துக் கல்லூரியில் மாலைப் பாடசாலையாக நடைபெறுகிறது. இடம்பெயர்ந்து தற்காலிகமாக வேறு பாடசாலைகளில் கல்வி கற்கும் சகல மாணவரும் அம் மாணவரின் பெற்றோர்களும் மாணவரின் நன்மை கருதி உடன் சந்திக்கும்படி ம. வி. அதிபர் திரு. அப்பாத்துரை கேட்டுள்ளார்.

## உல்லாசப்பயணிகள் வருகையில் வீழ்ச்சி

(கொழும்பு)

கடந்த வருடம் மே 1ம் திகதி ஜனாதிபதி பிரேமதாசா கொலை செய்யப்பட்ட பின்னர் இலங்கைக்கு வரும் வெளிநாட்டு உல்லாசப்பயணிகள் தொகையில் பெரும் வீழ்ச்சி ஏற்பட்டுள்ளது.

1992ம் வருடத்தைவிட கடந்த வருடம் உல்லாசப் பயணிகள் வருகையில் பல சதவீத வீழ்ச்சி ஏற்பட்டுள்ளது என உல்லாசப்பயண சபையின் மாதாந்த அறிக்கை தெரிவிக்கின்றது.

கொழும்பிலும் ஏனைய பகுதியிலும் தமிழர் பரவலாக கைது செய்யப்பட்டு வருவதாலும் அச்சத்தால் உல்லாசப்பயணிகள் வருகை வீழ்ச்சியடைந்துள்ளதாக தெரிவிக்கப்படுகிறது. (இ)

★ மார்ச்சில் பாரிய தாக்குதலாம்

# புலிகள் அழிவார்களோ இல்லையோ பொதுமக்கள் அழிவார்கள்

(கொழும்பு)

வடக்கில் மார்ச்சில் படையினர் பாரிய இராணுவ நடவடிக்கை ஒன்றை மேற்கொள்வது உறுதியாகிவிட்டது. இதனால் புலிகள் அழிவார்களோ இல்லையோ பொதுமக்கள் அழிவில் இருந்து தப்புவது மிகக்கடினம் என கொழும்பிலுள்ள தமிழ் கட்சி பிரமுகர்கள் கூறியுள்ளனர்.

உள்ளூராட்சி தேர்தல் முடிந்தவுடன் இத்தாக்குதல் ஆரம்பமாகுமெனவும் இதற்கான சகல வேலைகளும் பூர்த்தியாகிவிட்டதாகவும் படை வட்டாரங்கள் கூறியுள்ளன.

தற்போது கிழக்கிலும் வவுனியாவிலும் ஆயிரக்கணக்கான படையினர் குவிக்கப்பட்டு பாதுகாப்பு பலப்படுத்தப்பட்டுள்ளது. இத்தேர்தலில் வாக்காளர்களின் பாதுகாப்பை உறுதிப்படுத்துவதே இராணுவத்தின் கடமை என்றும் தேர்தலில் இராணுவ ரீதியான தலையீடு எதுவும் இருக்காது என கிழக்கு பிராந்திய தளபதியும் இராணுவ தலைமை அதிகாரியுமான மேஜர் ஜெனரல் லக்கி அல்கம கூறியுள்ளார். (இ)

## தொற்று நோயினால் பண்டிதர் குடியிருப்பில் ஐந்து சிறுவர் மரணம்

(ஆனைப்பந்தி)

நெடுங்கேணி பண்டிதர் குடியிருப்பில் கடந்த ஒரு மாத காலத்திற்குள் தொற்றுநோய்களினால் ஐந்து சிறுவர்கள் உயிரிழந்துள்ளனர்.

காய்ச்சலினால் வேலணையைச் சேர்ந்த வாமதேவன் அருள் (2 1/2 வயது) மார்க்கண்டுதாசன் சாலினி (4 வயது), தளையரன் (தர்ஜினி 2 வயது), கோகபாலு தீபுகா (3வயது), வயிற்றுவலியினால் புங்குடுதீவைச் சேர்ந்த மணிவண்ணன் கிருஷ்ணபிரியா (8வயது) ஆகிய சிறுவர்கள் மரணமடைந்துள்ளனர்.

மேலும் சிறுவர்கள் வயதுவந்தோர் என அனேகர் தரப்பினருமாக அனேகர் காய்ச்சலினால் பீடிக்கப்பட்டுள்ளனர். 101-இ

உ

சிவமயம்

திருநெல்வேலி

## சிவன்கோயில் புனருத்தாரணப்பணிக்கு நிதியுதவி செய்வீர்!!

இறைவன்திருவருளால் 29-10-93ல் பாலஸ்தாபன கும்பாபிஷேகம் நடைபெற்று

★ கும்பாபிஷேக திருப்பணி ★

நடைபெற்று வருவதால்

இப்பணி சிறக்க அனைவரும் தங்களால் இயன்றளவு நிதியுதவி, பொருளுதவி வழங்கி

இஷ்டசித்திகளைப் பெற்றுக்கொள்ளுமாறு வேண்டுகிறோம்.

ஃ தெய்வீகப் பணி ஆத்ம ஈடேற்றத்துக்கு உதவும். வாரி வழங்குவீர்!

ஸ்ரீ காயா ரோஹண சுவாமி தேவஸ்தானம்.

வாழ்த்துபவர்:

கண்ணன் லொட்ஜ்

பலாலிச் சந்தி, திருநெல்வேலி, (ஏ-3838)

## Jaffna College Institute of Technology

VADDUKODDAI

### நேர்முகப் பரீட்சை

எமது விளம்பரத்திற்கு அமைய விண்ணப்பித்தவர்களிற்கான

★ நேர்முகப் பரீட்சை ★

இம்மாதம் 17-ம், 18-ம் திகதிகளில் வட்டுக்கோட்டையில் எமது வளாகத்தில் நடைபெறும்.

இதற்கான கடிதங்கள் அனுப்பப்பட்டுள்ளன.

விண்ணப்பதாரர்கள் இந் நேர்முகப் பரீட்சைக்கு சான்றிதழ்களுடன் சமூகமளிக்கவும்.

விண்ணப்பிக்கத் தவறியவர்கள் விண்ணப்பப் பத்திரத்துடன் 17-ம், 18-ம் திகதிகளில் நேர்முகப் பரீட்சைக்குத் தோற்ற வசதி செய்யப்பட்டுள்ளது.

(ஏ-3837)

## ★ கண்காட்சி ★

சித்தமருத்துவ மாணவர் வாரத்தை முன்னிட்டு

| | | |
|---|---|---|
| 21-02-94 | திங்கட்கிழமை | முற்பகல் 9-30 மணி |
| 22-02-94 | செவ்வாய்க்கிழமை | பிற்பகல் 4-30 மணி |
| 23-02-94 | புதன்கிழமை | வரை |

கண்காட்சி நடைபெறும்.

இடம்: யாழ். பல்கலைக்கழக சித்தமருத்துவத்துறை, கைதடி.

1. ஆரோக்கிய வாழ்விலும் நோயுள்ள நிலையிலும் மூலிகைகளின் பங்கு.
2. போர்க்கால சூழ்நிலையில் தொற்று நோய்களில் இருந்து எவ்வாறு பாதுகாப்பது.
3. பாடசாலை மாணவப்பராயத்தில் உடல், உளவளர்ச்சிக்கு அத்தியாவசிய எடுக்கவேண்டிய நிறையுணவு, இப்பராயத்தில் ஏற்படும்நோய்கள், தடுக்கும் முறைகள் ஆகிய பல அம்சங்கள் அடங்கியுள்ளன.

அன்பளிப்பு: ரூபா 5/-

★ அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம் ★

(சி-811)

## யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம் இலங்கை

பொருத்தமான அபேட்சகர்களிடமிருந்து சுருக்கெழுத்தாளர் தரம் II (ஆங்கிலம்) பதவிக்கான விண்ணப்பங்கள் 1994-03-11 ஆம் திகதி வரை என்னால் ஏற்றுக்கொள்ளப்படும்.

சம்பள அளவுத் திட்டம்:

ரூபா 2890 -10X55— 7X65—3895/- (இத்துடன் நிலுவையிலுள்ள வேலை நிறைவேற்றப்படியாக 1994 டிசெம்பர் 31ம் திகதிவரை சம்பளத்தின் 25 சத வீதத்திற்கு சமமான தொகை செலுத்தப்படும்)

தகைமைகள்:

1. ஆங்கிலம் உட்பட மூன்று பாடங்களில் திறமைச் சித்திகளுடன் இரண்டு தடவைகளுக்கு மேற்படாது க. பொ. த. (சாதாரணதர) பரீட்சையில் ஆறு பாடங்களில் சித்தி.
2. பின்வரும் ஆகக்குறைந்த வேகங்களுடன் ஆங்கிலச் சுருக்கெழுத்தில் தேர்ச்சி.

சுருக்கெழுத்து நிமிடத்திற்கு 80சொற்கள். தட்டச்சுத்தல் நிமிடத்திற்கு 35 சொற்கள்.

வயது:

40 ஆண்டுகளுக்கு மேற்படலாகாது

குறிப்பு:

(அ) தெரிவு சோதனை மூலமும் நேர்முகப் பரீட்சை மூலமும்

(ஆ) தமிழ் சுருக்கெழுத்தில் மேலதிக அறிவுடையவர்களுக்கு முன்னுரிமை வழங்கப்படும்.

யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தில் அமைந்துள்ள மக்கள் வங்கிக் கிளையில் அல்லது பல்கலைக்கழக நிதிக் கிளையில் ஒவ்வொரு விண்ணப்பப் படிவத்திற்கும் ரூபா. 20/- செலுத்தியபின்னர் இப் பல்கலைக்கழகத்தின் தாபனக்கிளைச் சிரேஷ்ட உதவிப் பதிவாளர் அலுவலகத்தில் பெற்றுக் கொள்ளக்கூடிய படிவங்களில் மாத்திரம் விண்ணப்பங்கள் செய்யப்படவேண்டும். தபால் மூலம் படிவங்களையும், விபரங்களையும் பெற விரும்புவோர் யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தின் நிதிக்கிளையில் பணம் செலுத்திப் பெறப்பட்ட ரூபா. 20/- பெறுமதியான காசுக்கட்டளை/ தபாற்கட்டளையுடன் 23X10 சமீ அளவுடைய சுய முகவரியிட்ட ரூபா 1/- முத்திரையொட்டப்பட்ட கடித உறையையும் அனுப்புதல் வேண்டும். விநியோகிக்கப்பெற்ற படிவங்களில் அனுப்பப்படும் விண்ணப்பங்கள் மாத்திரம் ஏற்றுக்கொள்ளப்படும்.

அரசாங்க திணைக்களங்கள், அரச கூட்டுத்தாபனங்கள், நியதிச் சட்ட சபைகள் ஆகியவற்றின் விண்ணப்பதாரர்கள் தமது நிறுவனங்களின் தலைவர்களூடாக விண்ணப்பித்தல் வேண்டும்.

விண்ணப்ப முடிவு தேதியின் பின்னர் கிடைக்கும் விண்ணப்பங்களும் விபரங்கள் தெளிவின்றிக் குறிப்பிடப்பட்டுள்ள விண்ணப்பங்களும் நிராகரிக்கப்படும்.

பதிவாளர்

யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம், யாழ்ப்பாணம், 1994-02-11

(ஏ 3835

### மணிவாக்கு

வறியவனுக்கு பல பொருட்கள் தேவை; ஆனால் பேராசைக்காரனுக்கோ எல்லாப் பொருட்களுமே தேவை.

— லைபட்.

## நமது நோக்கு

### மனித வளம் மலர்ச்சிபெற...!

"பொருளாதார வளர்ச்சியில் நாம் கவனம் செலுத்தாவிடின் இவ்வளவு காலமும் நாம் துன்பப்பட்டு போராடிப் பெறவிருக்கும் சுதந்திரம் வலுவற்றதாகி விடும்!"

இப்படிச் சுட்டிக்காட்டியிருக்கிறார் ஒருவர். பல்கலைக்கழகத் துணைவேந்தர், பரிசளிப்பு விழா ஒன்றில் கலந்துகொண்டு!

தனியான மொழி, கலை, கலாச்சாரம் கொண்ட ஓர் இனம் இன்றும் அவலப் படுபவர்களாக இருப்பதன் காரணம் என்ன? இப்படிக் கேள்வியை அவர் எழுப்பி அதற்கான பதில் சுயசார்புப் பொருளாதார வளர்ச்சி இன்மையே என விளக்கியுள்ளார்.

இயற்கை வளங்கள் நிறைய இருந்தால்தான் பொருளாதார வளம் பெறலாம் என்ற கோட்பாடு இன்றைய நவீன உலகில் உண்மையானதா? அப்படி அல்ல என்பதற்கு பல இயற்கைவளம் குன்றிய நாடுகளின் வளர்ச்சி!

இயற்கை வளங்கள் குறைவாக இருப்பினும், மனித மூல வளத்தைப் பயன்படுத்திப் பல நாடுகள் தன்னிறைவுப் பொருளாதார நெறியில் வளர்ச்சி காணவில்லையா?

இந்த வகையில்தான் நாம் எழுப்பும் கேள்வி என்ன? இன்றைய எமது கல்வி முறையில், பாடசாலைகளில் மாணவர் பெறும் பயிற்சிகள் மனித வளத்தை மலர்ந்திடச் செய்யும் விதத்தில் அமைந்துள்ளனவா?

இரண்டு சதவீதமான மாணவர்களைப் பல்கலைக்கழகத்திற்கு அனுப்பும் நோக்கில், ஏட்டுக் கல்வியை ஊக்குவிக்கும் கல்விமுறை தொடருவது தான் யதார்த்த நிலை. ஏனைய 98 சத வீதமானோரின் நிலை என்ன?

ஒரு மாணவன் பாடசாலையை விட்டு வெளியேறும்போது ஒரு தொழிலைச் செய்து வாழக்கூடிய கல்விமுறை உருவாக்கப்படவேண்டும் எனத் துணைவேந்தர் சுட்டிக்காட்டியமை கல்விப்பகுதியினரின் கவனத்திற்குரிய தாகும்.

தெற்கிலே, திறந்த சந்தைப் பொருளாதாரக் கொள்கை நடைமுறைக்கு வந்தபின், பொருளாதாரக் கோலம் விரைவாக மாறிக்கொண்டிருக்கின்றது. அதற்கேற்ற வகையில் புதிய பயிற்சி நெறிகள் நடைமுறைக்கு வந்துள்ளன.

இங்கு, மனித வளத்தை மலர்ச்சியடையச் செய்து, தன்னிறைவுப் பொருளாதாரத்தை வளர்க்கும் பயிற்சிகள் பற்றிச் சிந்திக்கவேண்டியது அவசியமல்லவா?

## வடக்கு-கிழக்கு பிரச்னைக்கு தீர்வுகாண
# யாருடன், எப்போது பேசுவது இதுதான் 'டி. பி'யின் பிரச்னை!

(கொழும்பு)

வடக்கு-கிழக்குப் பிரச்னைக்குத் தீர்வு காண ஜனாதிபதி விஜயதுங்க தயாராகவிருப்பதாகவும் எனினும் இதுகுறித்து யாருடன் பேசுவது? எப்போது பேசுவது? என்பன போன்ற கேள்விகளே எழுந்துள்ளதாகவும் 'சண்டே ரைம்ஸ்' தெரிவித்துள்ளது.

புலிகளின் பிரமுகர் திரு கிட்டுவின் செய்தியை கலாநிதி ஆசிர்வாதம் ஜனாதிபதிக்கு வழங்கிய பின்பே ஜனாதிபதி இவ்வாறான சிந்தனையிலிருப்பதாகவும் அப்பத்திரிகை கூறியது.

இது குறித்து கலாநிதி ஆசிர்வாதம் மேலும் கூறுகையில்: இரு தரப்பும் இணங்கினால் அரசுக்கும்-புலிகளுக்கும் இடையில் சமாதானப் பேச்சு ஆரம்பிக்க வாய்ப்பேற்படும். அச்சமயம் தாம் மத்தியஸ்தராக இருக்கத் தயாராகவுள்ளதாகவும் இப்பிரச்னைக்குத் தீர்வு காண நாம் ஒவ்வொருவரும் ஒவ்வொருவர் மீது நம்பிக்கை வைக்கவேண்டுமென்றார்.

தாம் மீண்டும் யாழ்ப்பாணம் செல்லவுள்ளதாகவும் தமது முன்று நாள் யாழ். விஜயத்தின் போது புலிகளின் மாநாட்டிலுள்ள 3 யுத்தக் கைதிகளைச் சந்தித்ததாகவும் கூறியதோடு சமாதானம் ஏற்படவேண்டும் என்பதில் புலிகளும் யாழ்ப்பாண மக்களும் தீவிரமாக இருப்பதாகவும்கூறியுள்ளார். -சி

## தமிழர்கள் யாவரும் பயங்கரவாதிகளல்லர்
# பயங்கரவாதிகள் எல்லோரும் தமிழர்களாய் உள்ளனர்
### ஜனாதிபதி கூறுகிறார்

(கொழும்பு)

வடக்கு-கிழக்கில் பயங்கரவாதிகள் அட்டகாசம் புரிகின்றனர். தமிழர் எல்லோருமே பயங்கரவாதிகள் அல்லர். ஆனால் பயங்கரவாதிகள் அனைவரும் தமிழர்களாக உள்ளனர். இவர்கள் நாட்டைப் பிரிப்பதையே முக்கிய குறிக்கோளாகக் கொண்டுள்ளனர். மக்களின் நலனில் அவர்களுக்கு அக்கறையில்லை. நாட்டை எந்நேரமும் யுத்த பூமியாக வைத்திருக்கவே விரும்புகின்றனர். நாட்டைப் பிரிக்க நான் ஒருபோதும் விடமாட்டேன்;

இவ்வாறு ஜனாதிபதி விஜயதுங்க கூறியுள்ளார். அவர் மேலும் கூறுகையில்; நான் இனத்துவேஷமாக பேசுவதாகப் பலரும் கூறுகின்றனர். இன்று எந்தக் கட்சியில் இனத்துவேஷமில்லை. பல தமிழ்க் கட்சிகள் உள்ளன. அதில் தமிழரைத் தவிர வேறெவரும் அங்கம் வகிக்கின்றனரா? ஆனால் இனத்துவேஷம் அற்ற ஒரு கட்சி ஐ.தே. கவே.

ஒரு சில வருடங்களுக்கு முன்னர் ஒரு வடிதத்துண்டின் முழு நாட்டையுமே ஸ்தம்பிதம் அடையச் செய்யும் நிலை இருந்தது. எனினும் அவற்றை நாம் முறியடித்தோம். வடக்கு கிழக்குப் பிரச்னைக்குத் தீர்வு காணவேண்டுமானால் ஸ்திரமான [ஐ.தே.க] ஆட்சியே இருக்கவேண்டும். பயங்கரவாதிகள் வாக்குகளை நம்புபவர்கள் அல்லர். வேட்டுக்களை நம்புபவர்கள். சில அரசியல்வாதிகள் வாக்குகளை எதிர்பார்த்து அவர்களுக்கே உடந்தையாக இருக்கின்றனர் அவர்கள் தேசத் துரோகிகள்.

நாட்டின் பெரிய இனம் பலமாக இருந்தால் தான் சிறிய இனத்துக்கும் பலமாக இருக்கும். பெரிய இனம் பலமற்றிருந்தால் சிறிய இனம் பாதிக்கப்படும். பெரிய இனமும் தெற்கு கட்சிகளும் ஒன்று சேருவதன் மூலமே வடகிழக்குப்பிரச்னைக்கு தீர்வு காண முடியும்.

நான் துவேசமாக ஒரு போதும் பேசியதில்லை. சீனர்கள் இந்திய பிரதமராக முடியாது. ஆபிரிக்கர் ஒருவர் அவுஸ்திரேலியாவின் பிரதமராக முடியாது. அதேபோன்றுதான் எமது நாட்டிலும் என்றார். (சி)

## தேர்தல் நோக்கத்திற்கான—
# வைத்தியர்கள் இடமாற்றம் கடும் எதிர்ப்பால் ரத்தானது

(கொழும்பு)

கொழும்பு பெரியாஸ்பத்திரியிலிருந்து 47 டாக்டர்களை கலிக்கும், அனுராதபுரத்திற்கும் திடீர் இடமாற்றம் செய்த அரசின் உத்தரவு டாக்டர்களின் கடும் எதிர்ப்பினையடுத்துக் கைவிடப்பட்டது!

தென் மாகாணசபைத் தேர்தல் முன்னிட்டு வாக்காளர்களைக் கவரும் நோக்கில் அரசு இந்த வைத்தியர்களை இடமாற்றம் செய்தது. காலிக்கும் அனுராதபுரத்திற்கும் செல்லும் வைத்தியர்கள் தேர்தல் முடியும் வரை மட்டுமே கடமையாற்றினால் போதுமான தெனவும் தெரிவிக்கப்பட்டது.

இதற்காக வைத்தியர்களுக்கு தினமும் 250 ரூபாவும், ஏனைய அலவன்சுகளும் போக்குவரத்து உட்பட வேறு வசதிகளும் வழங்கப்படும் எனவும் உறுதி வழங்கப்பட்டது. ஆனால் இந்த முடிவை அரசு கைவிடவேண்டுமென்றும் இல்லாவிடில் வேலைநிறுத்தத்தில் குதிக்கப்போவதாகவும் வைத்தியர்கள் எச்சரிக்கை விடுத்தனர். இதை அடுத்தே அரசின் இம்முடிவு கைவிடப்பட்டது. -சி

## புதிய விமானங்கள் வாங்க
# விமானப்படை குழு ரஷ்யா விரைவு

(கொழும்பு)

விமானப்படையை நவீனமயப்படுத்தும் பாதுகாப்பு அமைச்சின் திட்டத்தின் ஓரங்கமாக ரஷ்யாவிலிருந்துகொள்வனவு செய்யத் தீர்மானித்துள்ள எம் ஐ 8' ரக ஹெலிகொப்டர்களை பார்வையிட விமானப்படையை சேர்ந்த உயர் அதிகாரிகள் குழுஒன்று கடந்த வாரம் ரஷ்யாவிற்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளது.

விமானப்படை தற்போது பாவிக்கவுள்ள 'எம். ஐ. - 8 ரக விமானங்கள் உலகில் 21 நாடுகளில் உபயோகப்படுத்தப்பட்டு வருகின்றன. அமெரிக்கா தயாரித்துள்ள நவீன 'கோப்ரா' ஹெலிகொப்டருக்கு அடுத்த படியாக இந்த ஹெலிகொப்டர் தீவிரவாத எதிர்ப்பு நடவடிக்கைகளுக்கு பயன்படுத்தப்பட்டு வருகின்றன.

விமானப்படையினரிடம் எம் ஐ. 8' ரக இரண்டு ஹெலிகொப்டர்கள் இருக்கின்றன, கடந்த வருடம் முதல் கடலைகள் இவை கொள்வனவு செய்யப்பட்டன இந்தஹெலிகொப்டரில் பெருந்தொகையான சரக்குகளையும் துருப்புகளையும் ஏற்றிச்செல்ல முடியும். அத்துடன் விமானத் தாக்கி எதிர்ப்பு பீரங்கிகள் பொருத்தப்பட்டுள்ளன. அநேகமாக யுத்த முனைகளிலேயே இவ்வாறான ஹெலிகொப்டர்கள் பாவிப்பது வழக்கம் என இராணுவ ஆய்வாளர்கள் தெரிவிக்கின்றனர். சி)

அன்னிய உணவை மறப்போம்-நம் மண்ணிலே பயிரை வளர்ப்போம்

## கருத்தரங்கு

(யாழ்ப்பாணம்)

இலங்கைத் திட்டமிடலாளர் சங்கத்தின் யாழ்ப்பாணக் கிளையினால் ஒழுங்கமைக்கப்படும் கருத்தரங்கும் கலந்துரையாடலும் இம்மாதம் 19ம் திகதி மு.ப.9-00 மணிக்கு நாவலர் கலாச்சார மண்டபத்தில் நடைபெறும்; யாழ்ப்பாணப் பல்கலைக்கழக பொருளியல்துறை பேராசிரியர் நா. பாலகிருஷ்ணன் "அரசும் அபிவிருத்தியும், மக்களும்" என்ற விடயம் பற்றி கருத்துரை வழங்குவார்.

## இராசிபலன்

17- 2 - 1994

வியாழக்கிழமை

( தமிழுக்கு மாசி 5 )

சப்தமி முழுவதும், பரணி பி. இ. 2-43 வரை. சித்தயோகம். இராகுகாலம் பி. ப. 2-03 முதல் 3-33 வரை. சுப நேரம் காலை 8-03 முதல் 9 33 வரை.

மேஷம்: மனமகிழ்ச்சி, பெரியோர் பாராட்டு கல்விச் சிறப்பு

இடபம்: வெகுளித்தனம், தந்தையார் நிந்தனை, அலைச்சல்

மிதுனம்: தொழில் போட்டி கடமை உணர்வு, பணவரவு

கடகம்: எதிர்பாராத வெற்றி குடும்ப சிறப்பு, தியாகம்.

சிம்மம்: உடல் அசதி, தாய் வழி துயர், காரியத் தடை.

கன்னி: சென்றவிடத்தில் பழி, கண்டிப்பு, பணக் கஷ்டம்.

துலாம்: விருந்துபசாரம், நீண்டநாள் பிரச்னை தீர்வு, மனச் சந்தோஷம்.

விருச்சிகம்: வெளிநாட்டுத் தலைவீடு, காரியபலிதம், சகோதர பாசம்!

தனுசு: தவறான சிந்தனை, மனக் கலக்கம், கடுமைத்திறம்.

மகரம்: குடும்ப பகைமை, மன குரோதம், அதிகசெலவு.

கும்பம்: தெய்வீகப் பணி, நண்பர் சகாயம், புதிய யுக்தி.

மீனம்: வருவாய் குன்றல், தொழில் பாதிப்பு, காரிய தோல்வி.

— ஜோஸ்யர்

## தவக்கால நற்சிந்தனை

"தன் நம்பிக்கையை ஆண்டவர் மீது வைத்தவனே பேறு பெற்றவன்" (சங் 39 4 அ.)

இறைவன் மனிதனைப் புரிந்துள்ளார். ஆனால் மனிதனோ இறைவனைப் புரிந்து கொள்ளவில்லை. இதனால் தான் இரக்கம் நிறைந்த இறைவன் அவன் மேல் அன்பு கூர்ந்து தம் ஒரே மகனை இவ்வுலகிற்கு எம் பொருட்டு அனுப்பினார். அவரின் வருகையினால் இதுவரை மரணத்தினால் நாம் மீட்படைந்தோம். இந்த நம்பிக்கையை நாம் வளர்ப்போம்.

-ஜோ. ததேயுஸ்

## கொழும்பு பல்கலைக்கழக
# விஞ்ஞானபீட மாணவன் மோசமாக தாக்கப்பட்டார்

(கொழும்பு)

கொழும்பு பல்கலைக்கழக விஞ்ஞானபீட மாணவர் ஒருவர் ஆயுதக் கோஷ்டி ஒன்றினால் பல்கலைக்கழக வளாகத்தினுள் வைத்து மிக மோசமாக தாக்கப்பட்டுள்ளார். தற்போது இவர் ஆபத்தான கட்டத்தை தாண்டிய நிலையில் கொழும்பு ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

தாம் எந்தவொரு அமைப்பையும் சார்ந்திராத போதும் தாம் 15 முதல் 20 பேரடங்கிய குழு ஒன்றினால் கொலை செய்யப்படும் நோக்கில் தாக்கப்பட்டதாகவும் தம்மை தாக்கியவர்கள், கத்தி இரும்புக்கம்பி, சைக்கிள் செயின்,

(5-ம் பக்கம் பார்க்க)

## இளங் கலைஞர் மன்றம்

# 14 - வது இசை விழா

o–o–o–o–o–o–o–o–o–o–o–o–o–o

இடம்: **கலா மண்டபம்**

சட்டநாதர் வீதி, நல்லூர்.

6ம் நாள்

**17-2-94 வியாழக்கிழமை**

**சோபனாஸ் - மதுரா வீட்டுமஹால் நிறுவனங்களின் ஆதரவில்**

**மாலை 4-00 — 5-00 மங்கள இசை**

நாதஸ்வரம் — எம். எஸ். சண்முகநாதன், எஸ். சுப்ரமணியம்

தவில் — பி. இன்னப்பழநி, கே. சேனாதிராஜா

**5-00 — 5-15 மிருதங்க இசை**

பி. சதிருபன், எஸ். சிவசிவா, எம். சுஜன், எஸ். சுதர்சமோகன்

**5.15 — 5.35 பாட்டு**

ஆர். பிரியதர்ஷினி, எம். சாருமதி — பாட்டு

சுமித்ரா — வயலின்

ஏ. செல்வரத்தினம் — மிருதங்கம்

**5-35 — 5-55 புல்லாங்குழலிசை**

பி. பத்மராஜா, வீ. சந்திரசேகரம், ரீ. ரவிராஜ், ஏ. கனகரத்தினம் — புல்லாங்குழல்

ம. கிருஷ்ணவேணி — வயலின்

கே. மயூரன் — மிருதங்கம்

**5-55 — 6-15 வயலினிசை**

பி. பத்மலோசனி, ஆர். கோகிலஜா, கே. சாருமதி, ரீ. சுதாஜினி, எஸ். மிருணாளினி — வயலின்

எஸ். துரைராஜா — மிருதங்கம்

**6-15 — 7-00 பாட்டு**

நந்தினி ராமலிங்கம் — பாட்டு

ஆர். எஸ். கேசவமூர்த்தி — வயலின்

கே. கண்ணதாஸன் — மிருதங்கம்

**7-00 — 7-30 மங்கள விளக்கேற்றல்**

திரு. ரீ. கோவிந்தசாமி (லீலா ஸ்ரோஸ்)

திரு. இ. தேவராஜ் (சோபனாஸ் புடவை)

திரு. க. சுதாகர்

தலைவர்: கலாநிதி ஏ. வீ. மணிவாசகர் (சிரேஷ்ட விரிவுரையாளர், பொருளியற்துறை யாழ். பல்கலைக்கழகம்)

பிரதம விருந்தினர்

திருமதி க. சிவசிதம்பரம் (பிரதேசசெயலர், நல்லூர்)

சிறப்பு விருந்தினர்

திரு. இ. இளங்கோவன் (உதவிப்பிரதேச செயலர், நல்லூர்)

**7-30 — 8-30 வயலினிசை**

பாக்கியலட்சுமி நடராஜா — வயலின்

எஸ். மகேந்திரன் — மிருதங்கம்

எஸ். துரைராஜா — கஞ்சிரா

**8-30 — 9-30 பரதநாட்டியம்**

"நாட்டிய கலாலயம்" மாணவிகள்

தயாரிப்பு: பாரதி சிவயோகநாதன்

வாழ்த்துவோர்:

## செல்வராஜா எரிபொருள் நிலையம் திருநெல்வேலி

(ஏ 3826)


---

தமிழீழ மக்களே

# மண்ணைத் தின்ன வைக்காத தமிழீழப் பொருண்மியம்

இலங்கைத் தீவின் வளமை யில் கணிசமான பகுதி தமிழீழத்திலேயேதான் உள்ளது. நெல் உற்பத்தி, மீன் உற்பத்தி என்று ஒவ்வொன்றாக நோக்குகையில் இது புலனாகும்.

தற்போதைய சூழ்நிலையில் ஸ்ரீலங்கா அரசின் பொருளாதாரத் தடை, எரிபொருள் தடை, மீன்பிடித் தடை ஆக்கிரமிப்பு நடவடிக்கைகளால் மக்கள் இடம்பெயர்வு போன்ற காரணங்களால் தமிழீழத்தில் உச்ச உற்பத்தி அளவை பெற்றுக்கொள்ள முடியாத நிலையில் இருப்பினும் தமிழீழ உற்பத்தி தொடர்ச்சியாக அதிகரித்து வருகின்றது. அதற்கான சகல செயற்பாடுகளிலும் தமிழீழ பொருண்மிய மேம்பாட்டு நிறுவனம் ஈடுபட்டு வருகின்றது.

1990 ம் ஆண்டு தமிழீழத்தின் மொத்த நெல் உற்பத்தி 6,09,000 மெ. தொன்.

தென் தமிழீழத்தின் நெல் உற்பத்தி மாத்திரம் 4,82,000 மெ. தொன்.

தென் தமிழீழ மக்களுக்குத் தேவையான நெல்லின் அளவு 1,79,640 மெ. தொன்.

எனவே தென் தமிழீழத்தின் மிகையான நெல் உற்பத்தி 3,02,360 மெ. தொன்.

அதே வேளை

வட தமிழீழத்தின் நெல் உற்பத்தி 1,27,000 மெ. தொ.

வட தமிழீழ மக்களுக்குத் தேவையான நெல் 1,94,610 மெ. தொன்.

வட தமிழீழத்தின் மேலதிக நெல் தேவை 67,610 மெ. தொன்.

எனவே தென் தமிழீழத்தின் மிகை உற்பத்தியைக் கொண்டு வட தமிழீழ மக்களின் பற்றாக்குறையை நிவர்த்தி செய்தால் கூட மேலதிகமான நெல் உற்பத்தி 2,34,750 மெ. தொன்.

இவ் மிகை உற்பத்தியானது ஸ்ரீலங்காவுக்கே போய்ச் சேருகின்றது.

ஆனால் வட தமிழீழத்தில் நெற் செய்கை பண்ணக்கூடிய மொத்த நிலப்பரப்பு 99055 ஹெக்ரேயர் ஆகும். இந்த நிலப்பரப்பில் பயிர் செய்து உச்சவிளைவினைப்பெற தமிழீழ பொருண்மிய மேம்பாட்டு நிறுவனம் திட்டமிட்டு செயலாற்றி வருகின்றது. எனவே ஒரு ஹெக்ரேயருக்கான சராசரி விளைச்சல் 2·5 மெ. தொ. எனக் கொண்டால் கூட இதிலிருந்து கிடைக்கக் கூடிய நெல்லின் அளவு 2,47637 மெ. தொன்.

ஆனால் வட தமிழீழ மக்களின் தேவை 1,94,610 மெ. தொன்.

ஆகவே வட தமிழீழத்தின் மிகை உற்பத்தி 53,027 மெ. தொன் ஆக உயர்த்தலாம்.

இந்த நிலையில் தென் தமிழீழத்தின் மிகை உற்பத்தியாகிய 3,02,360 மெ. தொன்

வடதமிழீழத்தின் மிகை உற்பத்தியாகிய 53,027 மெ. தொன்.

மொத்தமாக தமிழீழத்தின் மிகை உற்பத்தி 3,55,387 மெ. தொன் ஆகும்,

இந்த மேலதிக உற்பத்தி ஸ்ரீலங்காவுக்கே போய்ச் சேர்ந்தது. கடந்த காலத்தில் இதன் மொத்தப் பெறுமதி கிட்டத்தட்ட 450 கோடி ரூபா ஆகும்.

இவ்வாறே தமிழீழத்தின் மீன் உற்பத்தியை நோக்கும் போது

1983 ம் ஆண்டின் தமிழீழ மீன் உற்பத்தி 1,04,315 மெ. தொன்.

1990ம் ஆண்டு தமிழீழ மீன் உற்பத்தி 51,996 மெ. தொன்.

1990 ம் ஆண்டில் தமிழீழ மக்களிற்கான தேவை 40,000 மெ. தொன்.

ஆகவே மிகை மீன் உற்பத்தி 11,996 மெ. தொன்.

சுமுகமான நிலை காணப்படுமாயின் 1983-ம் ஆண்டைப் போல பல மடங்கு மீன் பிடிக்கப்பட்டு மிகை மீன் உற்பத்தி ஸ்ரீலங்காவிற்கே வழங்கக் கூடியதாக இருக்கும்.

இவ்வாறு இருக்கையில் தமிழீழத்தில் எதுவித வளங்களும் இல்லை என்றும் கூறுவது எம்மை நாமே ஏமாற்றிக் கொள்வதற்கு ஒப்பாகும்.

> விடுதலைப்புலிகள் ஈழம் கோருகின்றனர் என்றாலே அவர்களுக்கு ஈழம் கிடைக்காது. வடக்கு கிழக்கு ஈழம் தரப்படும் எனக் கூறி தெற்கிலுள்ள தமிழர்களை அங்கு செல்லுமாறு நாம் கோரினால் என்ன நடக்கும். உண்பதற்கு அவர்களிடம் என்ன இருக்கிறது. மண்ணை மட்டும்தான் அவர்கள் தின்ன வேண்டும். அங்கு வருமானம் தரும் வளங்கள் என்ன? வடக்கு வளம் கொண்ட பூமி அல்ல. சகல பொருட்களும் தெற்கிலிருந்தே அனுப்ப வேண்டியுள்ளது. ஒரு நாளைக்கு உணவுப் பொருட்கள் அங்கு அனுப்பப்படாவிட்டால் அங்குள்ளவர்கள் பட்டினியால் வாட வேண்டி ஏற்படும்.
>
> (ஸ்ரீலங்கா ஜனாதிபதி டி. பி. விஜேதுங்கா

—தமிழீழ பொருண்மிய மேம்பாட்டு நிறுவனம்

---

## தொழில் ஆணையாளர் 73 லட்சம் ரூபா

# நஷ்டஈடுவழங்கினார்

(கொழும்பு)

கட்டுநாயக்காசுதந்திரவர்த்தக வலயத்தில் உள்ள தனியார் கம்பனி ஒன்றைச் சேர்ந்த நிர்வாக முகாமையாளரான பெல்ஜியம் நாட்டைச் சேர்ந்தவரை கருணை முறையில் வேலை நீக்கம் செய்ததற்காக தொழில் ஆணையாளர் அவருக்கு 73 லட்சம் ரூபா நஷ்டஈடாக வழங்க வேண்டுமென தீர்ப்பளிக்கப் பட்டுள்ளது.

1972 ன் பின் தனிநபர் ஒருவருக்கு தொழில் ஆணையாளரால் வழங்கப்பட்ட அதிக தொகை நஷ்டஈடாக இது கருதப்படுகிறது. மேற்படி நிர்வாக முகாமையாளரின் பெயரில் 73 லட்சம் ரூபாவையும் வங்கியில் இடுமாறும் தீர்ப்பளிக்கப்பட்டுள்ளது.

இவ்வழக்கு ஒன்றரை வருடமாக நடைபெற்றது. வழக்காளியான பெல்ஜியம் நாட்டவரின் சார்பில் சட்டத்தரணிகள் மோதிலால்நேரு, எஸ். சிவபாதம் ஆகியோர் வாதிட்டனர். [ஈ

---


## இந்து சமயப் பேரவை

யாழ்ப்பாணம்

(இந்து சமய அமைப்புக்கள், இந்துக் கோயில் தர்மகர்த்தா சபைகள், இந்து சமய அபிமானிகளின் கூட்டமைப்பு)

# வருடாந்த கூட்ட அறிவித்தல்

காலம்: **06 - 03 - 1994 ஞாயிறு**

காலை 10.00 மணி

இடம்: **நல்லை ஆதீனம்**, நல்லூர்.

சாதாரண அங்கத்தவர்கள் 1993-ம் ஆண்டுக்கான சந்தா ரூபா 100/- அல்லது ரூபா 500/- செலுத்தி உறுப்புரிமையை புதுப்பித்துக்கொள்ளுமாறு அல்லது ஆயுட்கால உறுப்பினராகும்படியும் புதிதாக சேர விரும்புவோர் 28-2-94-ந் திகதிக்கு முன்னர் பொருளாளருடன் தொடர்பு கொள்ளுமாறும் கேட்டுக்கொள்கின்றோம்.

பிரேரணைகள் அனுப்ப விரும்புவோர்

**28 - 2 - 94-ந் திகதிக்கு முன்னர்**

அனுப்பிவைக்குமாறும் கேட்டுக்கொள்கின்றோம்.

நா. முத்தையா, தலைவர்.

சி. சக்திகிரீவன், கௌரவ செயலாளர்.

நல்லை ஆதீனம்,

நல்லூர், யாழ்ப்பாணம்.

14 - 2 - 94. (ஏ-3836)

# தெற்கிலும் பார்க்க வடக்கிலேயே சுதந்திரமாக நடமாடினேன்

## ஆரியரத்ன பேட்டி

(யாழ்ப்பாணம்)

"யாழ்ப்பாணத் தமிழரின் புத்தி சாதுரியமே யாழ்ப்பாணத்தில் கார்கள் எல்லாம் மண்ணெண்ணெயில் ஓடுகிறது" இவ்வாறு யாழ்வந்து கொழும்பு திரும்பிய சர்வோதயத் தலைவர் ஏ. ரீ. ஆரியரத்ன 'சண்டே ரைம்ஸ்'க்கு வழங்கிய பேட்டியில் தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது: நான் தெற்கிலும் பார்க்க வடக்கில் சுதந்திரமாக எனது மனைவியுடனும் என்னுடன் வந்தவர்களுடனும் எங்கும்போய் வந்தேன். எங்கும் பின்னால் புலிகளும் வரவில்லை. படையினரும் வரவில்லை. சுதந்திரமாகவே செயற்பட்டேன். எங்கும் போய் வரலாமென விடுதலைப் புலிகளும் சொல்லியிருந்தனர். நான் இம்முறை மேற்கொண்ட விஜயம் சமாதான முயற்சியல்ல. தனிப்பட்ட விஜயத்தினையே மேற்கொண்டேன். ஆனால் யாழ்ப்பாண மக்களின் நாடியைப் பிடித்துப்பார்க்க இச் சந்தர்ப்பத்தை பயன்படுத்திக் கொண்டேன்.

பலாலியிலிருந்து காங்கேசன்துறைவரை படையினரின் கட்டுப்பாட்டிலேயே உள்ளது. நான் இங்கே ஏதும் வீடுகள் மிஞ்சியிருப்பதைக் காணவில்லை. எல்லாம் அழிக்கப்பட்டுள்ளன அத்துடன் கால்நடைகள் எதனையும் காணவில்லை. நாங்கள் பருத்தித்துறை துறைமுகம் செல்கையில் பெரிய கப்பலிலிருந்து வள்ளத்துக்கும், வள்ளத்திலிருந்து பாஜ்ஜுக்குமாக எட்டுமுறை ஏறி இறங்கி பெரும் சிரமங்களை அனுபவித்தோம். ஆனால் அங்குள்ள தொழிலாளர் மிகவும் அன்போடு என் மனைவியை 'பயப்படாதையுங்கோ அம்மா' என சிங்களத்திலும் கூறி உதவியதுமனதை நெகிழ வைத்தது.

"இறுதியில் நாங்களும் மனிதர்கள்தான் என்பதை உங்கள் அரசுக்கு சொல்லுங்கள் அம்மா" என்று என் மனைவிக்கு உதவியவர்கள் கூறினர்.

நான்சென்ற இடமெல்லாம் இந்தச் சண்டையை முடிவுக்குக் கொண்டுவர உதவுமாறு மக்கள் கேட்டுக்கொண்டனர். தாங்கள் சிங்களவர்களுக்கு எதிரானவர்கள் அல்லஎன்றும் எல்லோரும் ஒற்றுமையாகப் பேசி சமாதானமாக சண்டையை தவிர்த்து பிரச்சினைகளை தீர்ப்போம் எனவும் வலியுறுத்தினர்.

நான் தமிழில் பேசியபோது அவர்கள் சிங்களத்திலே பதிலளித்தனர். இது ஒரு பேட்டியை ஞாபகப்படுத்தியது.

முன்னர் மின் ஒளி விளக்கு எரிந்த இடங்களில் மண்ணெண்ணெய் விளக்கு எரிகிறது. அங்கே மின்சாரம் இல்லை.

யாழ்ப்பாணத்தில் எல்லாப் பொருட்களும் விலை அதிகம். எனினும் அங்குள்ள மக்கள் அதனை ஏற்றுக்கொண்டு பழக்கப்பட்டு விட்டார்கள். யாழ் கோட்டைநகர் பேய்க்குடி கொண்ட நகரமாக தென்படுகிறது. அங்குள்ள கட்டிடம் எதுவும் உறுதியாய் இல்லை. கச்சேரிகூட அழியும்நிலையிலுள்ளது. 1982 இல் நான் கச்சேரிக்கு வந்தபோது நாட்டிய நெல்லி மரமும் எனது சொந்த கைச்சரிதை ஆவணமும் மாத்திரம் சேதமுறவில்லை. மற்ற எல்லாம் முண்டுக்கு சேதமாகியதாக யாழ் அரச அதிபர் கூறினார்.

யாழ்ப்பாண வைத்தியசாலை புறக்கோட்டை சந்தைபோல் கிடக்கிறது. அங்குள்ள வைத்தியர்களின் திறமையால் பல நற்கருமங்கள் நடைபெறுகின்றன இவ்வைத்தியசாலை ஐ சி ஆர். சி.யின் கீழ் இயங்குகிறது. இதுபொது மக்களுக்காகவே செயற்படுவதால் இதற்கு உதவவேண்டிய பொறுப்பு உண்டு.

அங்குள்ளோர் என்னை மீண்டும் வரச் சொன்னார்கள். இங்குள்ள சிங்களவர்களையும், பௌத்த குருமார்களையும் அழைத்துவரச் சொன்னார்கள். விரோதம் பகைமை இல்லை என்பதை உணர்த்த அவர்கள் விரும்புகிறார்கள்.

இரு பகுதியினரிடையேயும் பாரிய புரிந்துணர்வின்மையே நிலவுகிறது. பத்திரிகைகளுக்கு பெரிய பொறுப்புகள் உண்டு. சிங்களவர்கள் தமிழர்களின் இரத்தத்திற்கு வேட்கை கொண்டவர்கள் அல்லர் என்பதையும் அதேபோல் தமிழர்களும் சிங்களவர்களின் இரத்தத்திற்கு வேட்கை கொண்டவர்கள் அல்லர் என்பதையும் நாட்டின் சில பகுதியினருக்கும் தெளிவுபடுத்த வேண்டிய பொறுப்பைப் பத்திரிகைகள் கட[illegible] வேண்டுமென்றும் அவர் மேலும் கூறினார். -கே-சி.

### இரத்மலானை

(1ம் பக்கத் தொடர்ச்சி)

பொறுப்பேற்றால், தற்போது இங்கு கல்வி கற்றுவரும் ஆயிரக்கணக்கான தமிழ்மாணவர்களின்நிலை ஒரு கேள்விக்குறியாகிவிடும் என்றும், செய்திகள் தெரிவிக்கின்றன.

வி.-சி


யாழ்ப்பாண மாநகரசபை

கேள்வி அறிவித்தல்

1994

கீழ்க்காணும் விபரங்களையுடைய கடைகளுக்கு கேள்விகள் கோரப்படுகின்றது.

1. நாவாந்துறை ஆட்டிறைச்சிக் கடை:

| | | கேள்விப் பிணைப் பணம் | நிர்ணயிக்கப்பட்ட ஆகக் குறைந்த கேள்வித் தொகை |
|---|---|---|---|
| கடை இல: 08 | 1 வருடம் | 2500/- | 4166/- |
| கடை இல: 09 | 1 வருடம் | 2500/- | 4416/- |

2. நாவாந்துறை கோழிக் கடை:

| | | | |
|---|---|---|---|
| கடை இல: 10 | 1 வருடம் | 2500/- | 4166/- |

3. பஸ் நிலையக் கடை:

| | | | |
|---|---|---|---|
| கடை இல: 18 ஏ | 5 வருடம் | 2500/- | 18000/- |

கேள்விப் படிவம் வழங்கும் திகதி: 22 - 2 - 94
செவ்வாய்க்கிழமை பி. ப. 3-00

கேள்வி ஏற்கும் திகதி: 23 - 2 - 94
புதன்கிழமை நண்பகல் 12-00வரை

தபாலில் அனுப்பப்படும் கேள்விகளின் தாமதத்திற்கு மாநகரசபை பொறுப்பேற்க மாட்டாது.

மேலதிக விபரங்களை நாணயிக இறைவரி கிளையில் அலுவலக நேரத்தில் அறிந்துகொள்ளலாம்.

வே. பொ. பாலசிங்கம்.
ஆணையாளர்,
யாழ். மாநகரசபை.

மாநகர சபை அலுவலகம்,
யாழ்ப்பாணம்.
1994 - 02 - 16.

(ஏ-3840)


### கொழும்பு

(3-ம் பக்கத் தொடர்ச்சி)

போத்தல் மற்றும் பொல்லால் தாக்கி 'அசிட்' ஊற்றிய தாகவும் கூறினார்.

இரவு 9 மணிக்கு இச்சம்பவம் நடைபெற்றது. இவர் போட்ட அவலக்குரலையடுத்து விஞ்ஞானபீடாதிபதி அவ்விடத்திற்கு வந்தபோது இவரை தாக்கியவர்கள் தப்பி விட்டனராம். இதையடுத்தே கொழும்பு பல்கலைக்கழக விஞ்ஞானபீடம் மூடப்பட்டதாம். (கி)

## இந்தோனேஷியாவில் பூமி அதிர்ச்சி; 120 பேர் பலி

(ஜகார்த்தா)

இந்தோனேஷியாவின் வட சுமாத்திராவில் நேற்று அதிகாலை ஏற்பட்ட மிகப் பாரிய பூமி அதிர்ச்சியில் இறந்தோர் எண்ணிக்கை 120 பேராக உயர்ந்துள்ளதாம் இவ் எண்ணிக்கை மேலும் அதிகரிக்கலாம் எனவும் அச்சம் தெரிவிக்கப்படுகிறது. 1250க்கும் மேற்பட்டோர் படுகாயமடைந்துள்ளனர்.

இச்சம்பவத்தையடுத்து பெருமளவு கட்டிடங்கள் சேதமடைந்துள்ளதாகவும் பெருமளவு மக்கள் குறிப்பிட்ட பகுதியைவிட்டு இடம் பெயர்ந்துள்ளதாகவும் கூறப்படுகிறது. மேலும் இப்பகுதியில் பூகம்பம் ஏற்படலாமெனவும் அச்சம் தெரிவிக்கப்படுகிறது. க-கி

# தேர்தலில் ஐ.தே.க. தோற்றால் அகதிகளுக்கு உதவி நிறுத்தம்

(மட்டக்களப்பு)

உள்ளூராட்சித் தேர்தலில் ஐ. தே. க. தோற்றால் கிழக்கில் அகதிமுகாம்களில் உள்ள சுமார் ஒரு லட்சத்து ஏழாயிரம் தமிழ் அகதிகளுக்கான சகல உதவிகளும் நிறுத்தப்படுமென இராணுவத்தினர் எச்சரித்துள்ளனராம்.

அகதிமுகாம்களிலுள்ள அகதிகளின் வாக்குகளை ஐ. தே. க. வுக்கு வழங்கக் கோரி சமூகசேவை அதிகாரிகள் மூலமாக அகதிகளுக்கு ஆணையிடப்பட்டுள்ளது. இதற்கான நடவடிக்கையில் இராணுவத்தினர் ஈடுபடுத்தப்பட்டுள்ளனர்.

கிழக்கில் யுத்த நிலைமை காரணமாக இடம்பெயர்ந்த மக்களின் வாக்குகளையே அரசு பயன்படுத்தவுள்ளது. கிழக்கு மாகாணத்தில் தற்போது அகதி முகாம்களில் இருக்கும் மொத்த அகதிகளின் எண்ணிக்கை 1,06,052 மட்டு. மாவட்டத்தில் மட்டும் அகதி முகாம்களில் இருக்கும் அகதிகளின் தொகை 54,745. அவர்களில் வாக்குரிமை உள்ளோர் 65 வீதத்தினர்.

திருமலை மாவட்டத்தில் உள்ள 30,000 அகதிகளில் 70 வீதத்தினர் வாக்களிக்க தகுதிபெற்றுள்ளனர். அம்பாறை மாவட்டத்திலுள்ள 16,307 அகதிகளில் 60 வீதத்தினர் வாக்குரிமை உடையவர்கள். வி

# உங்களை நீங்கள் ஆளுங்கள் தமிழர் தங்களை ஆளுவார்கள்

(கொழும்பு)

"சிறுபான்மை இனங்களின் பிரச்சினையை பயங்கரவாதப் பிரச்சினைதான் என ஜனாதிபதி புரிந்து கொண்டால் பேரின வாதம்-பயங்கரவாதம் தான் சிறுபான்மையினருக்கான உண்மையான தீர்வு என்றும். சிங்களவர் தான் உங்களது நாட்டை ஆள வேண்டுமென்றும், நீங்கள் உங்களது நாட்டை ஆளுங்கள் விரைவில் அவர்கள் தங்களது நாட்டை தாங்களே ஆளுவார்கள்."

இவ்வாறு கொழும்பிலிருந்து வெளிவரும் தமிழ் வாரப் பத்திரிகை ஒன்று ஜனாதிபதி அண்மைக் காலமாக பேசிவரும் இனவாதப் பேச்சு குறித்து காரசாரமாக எழுதியுள்ளது.

அது மேலும் கூறுகையில்: தமிழ் மக்களின் உரிமைக்கான கோரிக்கை சுதந்திரம் பெற்ற காலத்திலிருந்தே ஆரம்பமாகி ஆயுத ரீதியான போராக வெடித்து ஒரு தசாப்தம் கடந்த பின்னரும், உங்களால் இவ்வாறுதான் பேச முடியுமென்றால் சிறுபான்மையினரின் பிரச்சினையை இப்படித்தான் புரிந்து கொள்ள முடியுமென்றால் அவர்கள் தங்களைத் தாங்களே ஆளுவதைத் தவிர வேறு வழியே இல்லை. (கி)


யாழ்ப்பாண மாநகரசபை

கேள்வி அறிவித்தல் - 1994

விடுமுறைச் சந்தை!

இடம்: மின்சார நிலைய வளவு

25-02-94ந் திகதி முதல் 31-05-94ம் திகதி வரையான காலங்களுக்கு மின்சாரநிலைய வளவு, (பழைய பஸ்தரிப்பு நிலையத்துக்கு அருகாமையில், சனி. ஞாயிறு மற்றும் விடுமுறை நாட்களில் மட்டும் அங்கீகரிக்கப்பட்ட பொருட்களை விற்பனைசெய்யும் இடங்களை குத்தகையில் விடுவதற்கு. அரக்கு முத்திரையிடப்பட்ட கேள்விகள் என்னும், 23-2-94ந் திகதி புதன்கிழமை நண்பகல் 12-00 மணிவரை ஏற்றுக் கொள்ளப்படும்.

கேள்விப் படிவங்கள் குறித்த அட்டவணையில் குறிப்பிடப்பட்டுள்ள கேள்விப் பிணையும், கேள்விப் படிவக் கட்டணம் ரூபா 50/-ம் செலுத்துவதன் மேல், 22-2-94ந் திகதி, செவ்வாய்க்கிழமை பிற்பகல் 3-00 மணி வரையும் யாழ்ப்பாண மாநகர சபை நாணயிக இறைவரிப்பகுதியில் பெற்றுக்கொள்ளலாம், பூர்த்தி செய்யப்பட்ட கேள்விப்படிவங்கள்... விடுமுறைச் சந்தைக்கான கேள்வி என எழுதப்பட்ட கடித உறையில் இட்டு, அரக்கு முத்திரையிடப்பட்டு யாழ்ப்பாண மாநகரசபையில் இதற்கென வைக்கப்பட்டுள்ள கேள்விப் பெட்டியில் 23-02-94 புதன்கிழமை நண்பகல் 12-00 மணிக்குப் பிந்தாமல் சேர்க்கப்படல் வேண்டும். இது தொடர்பான மேலதிக விபரங்களை மாநகரசபை நாணயித இறைவரிப் பகுதியில் அலுவலக நேரத்தில் அறிந்து கொள்ளலாம்.

| இட விபரம் | கேள்விப் பிணைப்பணம் | படிவக் கட்டணம் |
|---|---|---|
| சதுரத் துண்டுகள் 22 | 250/- | 50/- |
| வட்டத் துண்டுகள் 18 | 250/- | 50/- |

வே. பொ. பாலசிங்கம்
மாநகர ஆணையாளர்,
யாழ்ப்பாணம்.

மாநகரசபை அலுவலகம்,
யாழ்ப்பாணம்.
15-02-94.

(எ-3839)

# கடற்படையின் கட்டுப்பாட்டில் யாழ். கடல்நீரேரி இல்லை

## கடற் புலியை முறியடிக்க முயற்சியாம்

(கொழும்பு)

கடந்த வருடம் யாழ். கடல் நீரேரியில், கடற்படையினர் தமது முழுக் கட்டுப்பாட்டையும் இழந்துவிட்டனர் என 'சண்டே ஐலண்ட்' பத்திரிகை தெரிவித்துள்ளது.

கிளாலிக் கடலில் இரண்டு நீருந்து விசைப் படகுகளும், பருத்தித்துறைக் கடலில் மோட்டார் படகு ஒன்றும் புலிகளால் அழிக்கப்பட்டன. நாகதேவன்துறையில் ஐந்து படகுகள் கைப்பற்றப்பட்டதால் கடற்படையினரின் செயற்பாடு இப்பிராந்தியத்தில் ஸ்தம்பிதம் அடைந்துள்ளது.

புதிதாகக் கடலோரக் காவலுக்காகப் பிரான்ஸின் உதவியுடன் தயாரிக்கப்பட்டுள்ள பீரங்கிப் படகுகளை இப்பிராந்தியத்தில் பயன்படுத்தவும், கடற் புலிகளின் தாக்குதலை எப்படியாவது முறியடிக்கவும் வேண்டுமெனக் கடற்படையினர் எண்ணம் கட்டியுள்ளனராம். -இ

# பொது எழுதுநர் சேவை இடமாற்றப் பட்டியல்

(மானிப்பாய்)

பொது எழுதுநர்சேவையின் 1994ம் ஆண்டுக்கான வருடாந்த இடமாற்றப் பட்டியல் வடக்கு கிழக்கு மாகாண பொதுநிர்வாக அமைச்சினால் வெளியிடப்பட்டுள்ளது.

இவ்இடமாற்றப் பட்டியலில் யாழ் மாவட்டத்திலுள்ள பிரதேச செயலர் அலுவலகங்களில் பணிபுரியும் 10 பேர் வவுனியா, முல்லைத்தீவு, மன்னார், கிளிநொச்சி, திருகோணமலை ஆகிய மாவட்டங்களுக்கும், ஏனைய மாவட்டங்களிலுள்ள 10 பேர் யாழ் மாவட்டத்திற்கும் எதிர்வரும் ஏப்ரல் மாதம் முதல் இடமாற்றம் செய்யப்பட்டுள்ளனர். (71-இ)

# தமிழ் கட்சிகள் யாழ்ப்பாணம் செல்லுமா?

(கொழும்பு)

தமிழ் கட்சிகளோ அதன் தலைவர்களோ யாழ்ப்பாணம் செல்ல முடியுமா? என மக்கள் ஐக்கிய முன்னணித் தலைவரும் நாடாளுமன்ற உறுப்பினருமான திரு. தினேஷ் குணவர்த்தன கேள்வி எழுப்பியுள்ளார்.

இலங்கையில் 13 தமிழ் கட்சிகள் உள்ளன. இக்கட்சியினர் வடக்குக்குச் செல்ல முடியுமா? வடக்குக்கு சென்றால் அவர்களுக்கு என்ன நடக்கும் என்பது எமக்குத் தெரியும். புலிகளோ தமிழ் மக்களோ இவர்களை ஏற்றுக்கொள்வதில்லை. அவ்வாறெனில் வடக்கு-கிழக்கை கொடுக்கச் சொல் இவர்களே அது எப்படி?

இதேவேளை முன்னாள் அமைச்சர் காமினி ஜயசூரிய கூறுகையில்; தமிழர் பிரச்சினை தோன்றி ஏறத்தாழ 15 வருடங்களாகிவிட்டது போதனை செய்து, போதனை கேட்டு இப்பிரச்சினையை தீர்க்க முடியாது. இராணுவ தீர்வே இதற்கு ஒரே வழி என்றார். (இ)

● புளொட் முன்னாள் தலைவர்

# உமாமகேஸ்வரன் கொலைக்கு சித்தார்த்தனே காரணமாம்

(கொழும்பு)

புளொட் முன்னாள் தலைவர் உமாமகேஸ்வரனின் படுகொலைக்கு அதன் தற்போதைய தலைவர் சித்தார்த்தனே காரணம் என புளொட்டிலிருந்து அண்மையில் பிரிந்து சென்று கடந்த மாதம் நடுப்பகுதியில் கொழும்பில் வைத்து சுட்டுக்கொலைப்பட்ட உமாபிரகாஷ் தெரிவித்ததாக 'சண்டே ஐலண்ட்' தெரிவித்துள்ளது.

'புளொட்' அமைப்பை பிளவு படுத்தி அதன் ஒரு பிரிவுக்கு [illegible] உமா பிரகாஷை [illegible] வதில் இலங்கை அரசுக்கு பெரும் பங்கிருப்பதாக 'புளொட்' தலைவர் சித்தார்த்தன் குற்றம் சாட்டியுள்ளார்.

உமாபிரகாஷின் கொலைக்கு சித்தார்த்தன் தலைமையிலான 'புளொட்' குழுவினரே காரணம் எனவும் நம்பப்படுகிறதாம். இலங்கை இராணுவத்திற்கு இவர் பலவழிகளிலும் பெரும் உதவிபுரிந்து வந்ததாகவும் கூறப்படுகிறது. (இ)

# சிறுவர் பாதுகாப்பு நிதிய பிரதிநிதிகள் யாழ். வருகை

(யாழ்ப்பாணம்)

கொழும்பிலிருந்து சிறுவர் பாதுகாப்புப் நிதியப் பிரதிநிதிகள் குழு ஒன்று யாழ். மாவட்டத்துக்கான விஜயமொன்றை மேற்கொண்டு நேற்று யாழ்ப்பாணம் வந்து சேர்ந்துள்ளனர்.

இந்தக்குழுவில் சிறுவர் பாதுகாப்பு நிதிய இணைப்பாளர் திரு. பற்றிக் வன்ட் பிறன்ஸ் மற்றும் தொழில்நுட்ப ஆலோசகர் திருமதி பசுபரா கிறேசி ஆகியோர் இடம் பெற்றுள்ளனர்.

இவர்கள் இன்று காலை சிறுவர் பாதுகாப்புத் திணைக்கள ஆணையாளரை அவரது பணிமனையில் சந்தித்து உரையாட உள்ளார்கள். இதனைத் தொடர்ந்து பிற்பகல் ஒரு மணிக்கு சட்டநாதர் வீதியில் அமைந்திருக்கும் அரச சிறுவர் பராமரிப்பு இல்லத்தையும் பார்வையிட உள்ளனர். (162-இ)

லேக்கவுஸ்

# பத்திரிகையாளரும் கடத்தப்பட்டார்

(கொழும்பு)

லேக்கவுசை சேர்ந்த பத்திரிகையாளரான தேவதாசன் செந்திவேல் (26 வயது) இனந்தெரியாதோரால் கடந்த 1-ம் திகதி கடத்தப்பட்டுள்ளதாக கொழும்பு பத்திரிகை ஒன்று தெரிவித்துள்ளது.

தினகரன் பத்திரிகை ஆசிரியர் பீடத்தை சேர்ந்த இவர் பெப். 1-ம் திகதி காலை 6-00 மணியளவில் பம்பலப்பிட்டியில் தமது வீட்டிலிருந்து கடைக்குச் சென்ற இவர் காலை 9-00 மணியாகியும் வீடு திரும்பவில்லை. காலை 9-00 மணியளவில் இவரது வீட்டினுள் புகுந்த பொலிஸார் வீட்டை சல்லடை போட்டு தேடியுள்ளனர். சுமார் 2½ மணி வரை சோதனை நடைபெற்றது. இது வரை இவர் பற்றிய தகவல் இல்லையாம். இதேவேளை மகேஸ்வரராஜா தயாபரன் (27 வயது) என்ற இளைஞர் டிசம்பர் 16 ம் திகதி இரவு கடத்தப்பட்டார். [illegible] இரவு வெள்ளை வானில் வந்தோரே இவரை கடத்திச் சென்றனராம். இவர் பற்றிய தகவலும் இதுவரை கிடைக்கவில்லை. (இ)

# இலங்கை ஒரு 'புதையல் தீவு'

(கொழும்பு)

இலங்கை ஒரு 'புதையல் தீவு' என 'பி. பி. ஏசியா' என்ற வெளிநாட்டுச் சஞ்சிகை ஒன்று தெரிவித்துள்ளது.

அண்மையில் சூரியகந்த பகுதியில் தோண்டி எடுக்கப்பட்ட மண்டை ஓடுகள், எலும்புக்கூடுகளின் பின்னணியை வைத்தே, இக்கட்டுரையை அந்தச் சஞ்சிகை பிரசுரித்துள்ளது. இதனை இலங்கைத் தரப்பு வன்மையாகக் கண்டித்துள்ளது.

மேலும் ரூபவாஹினிக்கு எதிராகவும் இக்கட்டுரையில் குறிப்பிடப்பட்டுள்ளது. இலங்கையில் இயங்கும் இரண்டு தனியார் ஒலிபரப்பு நிலையங்களை அது பாராட்டியுள்ளது.

## மரண அறிவித்தல்

### சவரிப்பிள்ளை மரியாம்பிள்ளை

சில்லாலையைச் சேர்ந்த சவரிப்பிள்ளை மரியாம்பிள்ளை (உடையார்) 16-02-94 மாலை காலமானார். இவர் மரியம்மாவின் அன்புக்கணவரும் எட்வின் யோசப் (கல்வித்திணைக்களம் யாழ்ப்பாணம்) டெனிஸ் (தபாலதிபர் சங்கானை) காலஞ்சென்ற விக்டர், ஜெயராசா (நீர்ப்பாசனத்திணைக்களம், வவுனிக்குளம்) ரஞ்சிதம் (லண்டன்) புஸ்பம் (லண்டன்), புனிதம் (லண்டன்), அருள்திரு ரூபன் மரியாம்பிள்ளை (பங்குத்தந்தை [illegible]), இன்பம் (லண்டன்) ஆகியோரின் அன்புத் தந்தையும் மலர், ஜெயமணி (ஆசிரியை பெரியவிளான்), பற்றிமா (அல்லைப்பிட்டி) பேசுதாசன், ஜெயராசா, யோகதேவா ஆகியோரின் அன்புமாமனாரும், திவ்வியராஜ், கொலின், மொறின், அரவிந், ஆர்த்தி, ஜெயசங்கீதா, ரூபன், டொன், ஜேசன், ஜோஆன் ஆகியோரின் அன்புப் பேரனுமாவார். அன்னாரின் இறுதிச் சடங்குகள் இன்று 17-02-94 மாலை 3 மணிக்கு யாழ். புனித யுவானியார் ஆலயத்தில் திருப்பலியுடன் ஆரம்பமாகி நல்லடக்கத்திற்காக சில்லாலை சேமக்காலைக்கு எடுத்துச் செல்லப்படும். இவ்வறிவித்தலை உற்றார், உறவினர்கள், நண்பர்கள் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்: ம. எட்வின் யோசவ் (மகன்)
41/1 கோவில் வீதி,
யாழ்ப்பாணம். (சி-812)

**யுத்தத்தால்**

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

தளபதிகள் கலைப்படுகின்றனராம்.

இதேவேளை, இந்த யுத்தம் குறித்து முன்னாள் பிரிகேடியர் ரஞ்சன் டி சில்வா கூறுகையில்: இந்தப் போரில் எந்தத் தரப்பு வெற்றி பெற்றாலும் அரசியல் தீர்வு ஒன்றுக்கே வரவேண்டும். அதுதான் இறுதியானது. இதனைச் சகலரும் அறிவர். எனவே யுத்தத்தை விடுத்து, பேச்சுக்கள் மூலம் தீர்வு காண முயலவேண்டும் என்றார். ம-இ

**இனப் பிரச்னை**

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

இவ்வாறு 'சண்டே ஐலண்ட்' பத்திரிகையில் பிரபாத் சஹபந்து கட்டுரை எழுதியுள்ளார். அதில் மேலும் தெரிவிக்கப்பட்டிருப்பதாவது;

அரசு இப்போது ஒரு சிக்கலான நிலையிலுள்ளது. புலிகள் ஆயுதங்களை கீழே வைப்பதாக ஒத்துக்கொண்டாலொழிய அவர்களிடம் பேச அரசு விரும்பவில்லை. மேலும் தென் மாகாண சபைக்கான தேர்தல் நெருங்கும் இக்கருணத்தில் புலிகளுடன் எந்த ஒரு இணக்கத்திற்கும் தற்போது வந்தால் தென் பகுதியில் தனது செல்வாக்கு குறைந்துவிடுமோவெனவும் அஞ்சுகிறது.

அத்தோடு ஜனாதிபதி தேர்தல் சட்டப்படி வடக்கு கிழக்கு உட்பட சகல பகுதியிலும் இந்த வருடம் நடத்தப்பட வேண்டும். இதற்கு புலிகளை அடக்க வேண்டும். அல்லது அவர்களுடன் ஓர் உடன்பாடு கண்டு சமாதானமாக தேர்தல் நடத்த வேண்டும்.

ஜனாதிபதி விஜேதுங்க இந்நிலையில் ஜனாதிபதி தேர்வு முறையை மாற்ற எண்ணுகிறார். அதற்கு [illegible]

**ஈ. பி. டி. பி.**

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

ஆனாலும் இவ்விரு பகுதியினருக்குமிடையில் அங்கு மோதல் ஒன்று ஏற்படலாம் என்ற பதற்றம் தற்போது நிலவி வருவதாகக் கூறப்படுகிறது. (வி-இ)

**இலவச**

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

மாணவிகளுக்கு 2 யார் தொடக்கம் 3யார் வரை சட்டைத் துணியும் வகுப்புக்கேற்ற முறையில் வித்தியாசமான முறையில் வழங்கப்பட உள்ளன. ம இ

**ராஜீவ் கொலை**

(1ம் பக்கத் தொடர்ச்சி)

வழக்கில் மேலும் ஏழு பேரையும் சாட்சியம் அளிக்கும்படி நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது. (வி-இ)

**அமைச்சர்**

(1ம் பக்கத் தொடர்ச்சி)

சரத்திற்கு வரும் போது இவரை கொலை செய்ய திட்டமிடப்பட்டிருந்ததாம். எனினும் அது கண்டுபிடிக்கப்பட்டு தகுந்த நடவடிக்கை எடுக்கப்பட்டதாம். (இ)

**காமினியை**

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

இதேவேளை திரு. காமினி திஸநாயக்க ஐ.தே.க, வில் சாதாரண எம். பியாவதற்கே பல நாள் பிடிக்குமென கட்சி வட்டாரங்கள் கூறியுள்ளன. (ம-சி)

சுதந்திரக்கட்சி எதிர்ப்பு தெரிவித்துள்ளது. எனினும் மூன்றில் இரண்டு பெரும்பான்மை வாக்கைப் பெறுவதற்காக, ஐ. தே. க. சிறிலங்கா சுதந்திரக்கட்சியிலிருந்து சிலரை தம் பக்கம் இழுக்க முயற்சித்து வருவதாகவும் தெரியவருகிறது என்று தெரிவித்துள்ளார். (சே-இ)

## வயோதிபர் மரணம்

(யாழ்ப்பாணம்)

எதிர் எதிராகவந்த இரு சைக்கிள்கள் ஒன்றுடன் ஒன்று மோதுண்டதால் கீழே விழுந்த வயோதிபர் தலையில் காயமடைந்த நிலையில் ஸ்தலத்தில் பலியானார்.

மானிப்பாய் [illegible] நேற்று மாலை 5-00 மணியளவில் இடம் பெற்ற இவ்விபத்தில் சண்டிலிப்பாய் மாகியப்பிட்டியை சேர்ந்த தாமு அற்புதசீலன் (வயது60) என்ற வயோதிபரே பலியானவராவார். (இ)

**முரண்பட்ட**

(1ம் பக்கத் தொடர்ச்சி)

ராஜினாமா செய்யவிருந்தார். பின்னர் அது ஒருவாறு சமாளிக்கப்பட்டது. இவர் போன்றே இராணுவ தளபதி லெப். ஜெனரல் சிசில் வைத்தியரத்னவும் மிகமோசமான சூழ்நிலையில் பதவியை ராஜினாமா செய்யப்பட்டார் என்பதும் தெரிந்ததே. -இ

**எதிர்க் கட்சியினருடன்**

(1ம் பக்கத் தொடர்ச்சி)

பும் குறித்தும் திரு. ஆரியரத்ன இவர்களுக்கும் பூரண விளக்கம் அளித்துள்ளார். இதன்போது சமாதானத் தீர்வு ஒன்றையே தாங்களும் விரும்புவதாக அவர்கள் தெரிவித்தனராம்.

திரு. ஆரியரத்ன, சபாநாயகர் எம். எச். முஹமட், பிரதி சபாநாயகர் காமினி பொன்சேகா மற்றும் பல ஆளும் கட்சி முக்கியஸ்தர்களுடனும் சந்திப்புக்களை நடத்தியுள்ளார். -இ

இப்பத்திரிகை ''ஈழநாடு'' லிமிடெட் ஸ்தாபனத்தாரால் யாழ்ப்பாணம் சிவன் கோவில் மேற்கு வீதி, 63-ம் இலக்கத்திலுள்ள அவர்களது அச்சகத்தில் 1994ம் ஆண்டு பெப்ரவரி மாதம் 17-ம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.

Registered as a News paper at the General Post office Sri Lanka under Licence Number B/10336/B